1980 பிப்ரவரி 13]

திரு. துரை முத்துசாமி : இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதால் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவதாக முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ? அதை நிறுத்தி வைக்க இந்த அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

பதில் இல்லை.

ஆ. மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சப்-கோர்ட் நிறுவவேண்டிய அவசியம் குறித்து.

திரு. சே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, " மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சப்-கோர்ட் நிறுவ வேண்டிய அவசியம் குறித்து " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, the Government have accepted the proposal of the High Court, Madras for the constitution of a Sub-Court at Periakulam and have considered the same as Part II Scheme for 1980 and 1981 and the approval of the Standing Finance Committee has been obtained. The above scheme will be implemented during the year 1980–81.

இ. தஞ்சை மாவட்டம் திருவையார் வட்டம் மகாராஜபுரம் பகுதிகளில் பயிர் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோ. இளங்கோவன் திரு. அ. செல்லப்பா ஆகியோர் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாததால் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் மகாராஜபுரம், சாத்தனூர், மரூர், வடுவக்குடி ஆகிய இடங்களில் நெற்பயிர் வாடிவிட்டதால் விவசாயிகளிடம் நிலவும் பதட்ட நிலை குறித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, " மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாததால் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் மகாராஜபுரம், சாத்தனூர், மரூர், வடுவக்குடி ஆகிய இடங்களில் நெற்பயிர் வாடிவிட்டதால் விவசாயிகளிடம் நிலவும் பதட்ட நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.